**வணக்கம்!**

# எல்லோருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்!

## கல்வி

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் மேலதிக கற்கை நெறி வகுப்புகள் பொங்கல் விழா முடிந்து அடுத்து வரும் வாரத்திலிருந்து நடைபெறும்.

## கலைவகுப்புகள்

வழமைபோல் நடைபெறும், மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

## 18.01.2025 அன்னை தமிழர் திருநாள் (பொங்கல் விழா)

ஆறாம் வகுப்புக்கு உட்பட்ட மாணவர்களுக்கான பயிற்சிகள் இடைவேளைக்கு முன் நடைபெறும். எந்த நிகழ்ச்சிகள் எந்தெந்த வகுப்புகள் என்று வகுப்புகளுக்கு நேரம் வழங்கப்பட்டு பயிற்சிகள் நடைபெறும். ஆறாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான பயிற்சிகள் 12.30 மணிக்கு பின்னர் நடைபெறும்.

மேலதிக தகவல் பயிற்சியாளர்கள் மற்றும் இணைப்பாளர்கள் ஆசிரியர்கள் ஊடாக அந்தந்த வகுப்பு வைபர் குழுமங்களுக்கு தகவல் தருவார்கள்.

## நிதி 2024

Høst 2024 தவணை கட்டணங்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுவிட்டது. தயவுசெய்து குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணம் செலுத்துங்கள். ஏதேனும் கேள்விகள் இருந்தால், எங்களை தொடர்புகொள்ளுங்கள்: மின்னஞ்சல் faktura.lorenskog@annai.no  தொலைபேசி 908 89 393

செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

## ஆண்டுக்கூட்டம் 2025 - 15.02.2025 சனிக்கிழமை

இடம் : ஒசன் பாடசாலை மேல்க் கட்டிடம். நேரம்: 09:45-12:00 (இ.வே.10:45-11:15)

ஆண்டுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் சார்பாக ஏதாவது விடையங்கள் கொண்டுவரவிரும்பின் எமக்கு 12.01.2025 இற்கு முன்னதாக மின்னஞ்சலினூடாக lorenskog.annai@gmail.com அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். வழங்கப்பட்ட நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கப்படும் விடையங்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்படும். அதுவும் முழுமை பெற்ற அங்கத்தவராக இருத்தல் வேண்டும். நிகழ்ச்சிநிரல் பின்பு அனுப்பிவைக்கப்படும்.

குறிப்பு:
ஆண்டுக்கூட்டத்திலே அனைவரும் பங்கேற்கலாம். ஆனால் கேள்வி கேட்கும் தகைமைக்கு உரித்தானவர்கள் முழுமை பெற்ற அங்கத்தவர்கள் மட்டுமே!

எனவே அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை சரிபார்த்து கொள்ளவும். இதில் ஏதும் ஐயப்பாடு இருப்பின் நிதிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

2025 ஆண்டுக்கூட்டத்தில் இடம்பெறவிருக்கும் தெரிவுகள்.
-2025-2027 இற்கான நிர்வாகம்
-நிர்வாகத் தெரிவுக்குழு
-கணக்காய்வாளர்
-விளையாட்டுப் போட்டிக்கான குழு
-விளையாட்டுப் போட்டிக்கான இல்லப்பொறுப்பாளர்கள்

**எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்**

**18.01.2025 அன்னை தமிழர் திருநாள் (பொங்கல் விழா)**
**15.02.2025 வருடாந்தப்பொதுக்கூட்டம் லோறஸ்கூக் வளாகம்**

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும் மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**